**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2025 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 31-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| O.S.No. | : 497/2023 | வா.சா. | : 1 |
| பெயர் | : திருமதி. நர்மதா | | |
| க/பெ. | : திரு. மாதேஷ் | | |
| கிராமம் | : | சாதி | : |
| தாலுக்கா | : | சமயம் | : |
| வயது | : 60 | தொழில் | : |

**முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கில் வாதி. முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாகத் தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தை எனது முதல்விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். 19-11-2012 தேதியிட்ட தாவா 1 வது அயிட்டச் சொத்து சம்பந்தமாக 1 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 04-06-2012 தேதியிட்ட தாவா 2 வது அயிட்டச் சொத்து சம்பந்தமாக 1 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 31-02-2001 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆகவும், 01-01-2013 தேதியிட்ட வாதியும், 1 ம் பிரதிவாதியும் ஏற்படுத்திக்கொண்ட கிரைய உடன்படிக்கை ஆவணத்தின் ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.4 ஆகவும், 17-06-2013 தேதியிட்ட ரூ.40,00,000/-த்தை பெற்றுக்கொண்டதற்காக 2 ம் பிரதிவாதி வாதிக்கு எழுதிக்கொடுத்த ரசீது ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.5 ஆகவும், வில்லங்க சான்றிதழின் புகைப்பட நகல் வா.சா.ஆ.6 ஆகவும், 15-07-2013 தேதியிட்ட 1 வது அயிட்டச் சொத்தினைப் பொறுத்து 1 ம் பிரதிவாதி 3, 4 பிரதிவாதிகளுடன் ஏற்படுத்திக்கொண்ட கிரைய உடன்படிக்கையின் சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.7 ஆகவும், 18-10-2013 தேதியிட்ட 1 வது அயிட்ட சொத்தினை பொறுத்து 1 ம் பிரதிவாதி 3, 4 பிரதிவாதிகளுடன் ஏற்படுத்திக்கொண்ட கிரைய உடன்படிக்கை ரத்து ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8 ஆகவும், 18-10-2013 தேதியிட்ட 1 வது அயிட்டச் சொத்தினைப் பொறுத்து 1 ம் பிரதிவாதி, 4 ம் பிரதிவாதி பெயருக்கு ஏற்படுத்திக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9 ஆகவும், ஈரோடு மாவட்ட காவல் குற்றப்பிரிவு அலுவலகத்தில் குற்ற எண். 9/2014 ன் கீழ் பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் புகைப்பட நகல் வா.சா.ஆ.10 ஆகவும், 11-06-2018 தேதியிட்ட தாவா 1 வது அயிட்டச் சொத்தினைப் பொறுத்து 4 ம் பிரதிவாதி 6 ம் பிரதிவாதி பெயருக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.11 ஆகவும், 09-01-2013 தேதியிட்ட தாவா 2 வது அயிட்டச் சொத்தினைப் பொறுத்து 1 ம் பிரதிவாதி ஒரு கந்தசாமி என்பவருடன் ஏற்படுத்திக் கொண்ட கிரைய உடன்படிக்கை ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.12 ஆகவும், 10-02-2015 தேதியிட்ட தாவா 2 வது அயிட்ட சொத்தினை பொறுத்து 1 ம் பிரதிவாதி ஒரு கந்தசாமி என்பவருடன் ஏற்படுத்திக் கொண்ட கிரைய உடன்படிக்கை ரத்து ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.13 ஆகவும், 10-02-2015 தேதியிட்ட தாவா 2 வது அயிட்டச் சொத்தினைப் பொறுத்து 1 ம் பிரதிவாதி 7 ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.14 ஆகவும், 26-06-2023 தேதியிட்ட வாதி தரப்பில் பிரதிவாதிகளுக்கும், சத்தியமங்கலம் சார் பதிவாளருக்கும் அனுப்பிய வழக்குரைஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.15 ஆகவும், 26-06-2023 தேதியிட்ட அஞ்சல் ரசீதுகள் (8 எண்ணிக்கை) அசல் வா.சா.ஆ.16 ஆகவும், அஞ்சல் ஒப்புகை அட்டைகள் (6 எண்ணிக்கை) அசல் வா.சா.ஆ.17 ஆகவும், திருப்பப்பட்ட பதிவு அஞ்சல் உறைகள் (2 எண்ணிக்கை) அசல் வா.சா.ஆ.18 ஆகவும், 05-07-2023 தேதியிட்ட 4 ம் பிரதிவாதி தரப்பில் கொடுக்கப்பட்ட பதிலறிவிப்பு சார்வு நகல் வா.சா.ஆ.19 ஆகவும், 14-07-2010 தேதியிட்ட தமிழ்நாடு அரசு நாளிதழில் வெளிவந்த செய்து அசல் வா.சா.ஆ.20 ஆகவும், என்னுடைய ஆதார் அட்டை ஒளிப்பட நகல்

வா.சா.ஆ.21 ஆகவும் குறியீடு செய்ய வேண்டுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**